**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 204/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW7 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07th day of November 2023.

**(A1 to A3 are present.)**

# S.C. No. 204/2018

# 07.11.2023

**அ.த.சா.7 - திரு. S.U. ராஜா, த/பெ. சுப்பிரமணி, ஆ/வ-42**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை சிவில் சப்ளை சிஐடியில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.10.2015 அன்று 14.30 மணிக்கு SRMC காவல் நிலைய ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் ராஜேஷ் என்பவர் எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்று SRMC காவல் நிலைய குற்ற எண். 910/2015, ச/பி. 294(பி), 448, 506(2) இதச உ/இ 3 of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மேற்சொன்ன முறையில் நான் பெற்றது ஆகும். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது ஆகும். முதல் தகவல் அறிக்கை அதசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தேதியிலேயே 15.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அருள், ராஜா ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் நான் தயார் செய்தது ஆகும். பார்வை மகசர் அதசா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அதசா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேலும், சம்பவயிட சாட்சிகளான அன்பழகன், முகமது ராஜானி, பசுபதி மற்றும் புகார்தாரர் ராஜேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளை தேடி போரூர் விக்னேஷ்வரா நகர் பஸ் ஸ்டாப் அருகில் தகவலாளி மூலம் கிடைத்த தகவலை பெற்று 21.10.2015 அன்று 16.15 மணிக்கு மேற்படி இடத்தில் நின்றுக்கொண்டிருந்த எதிரி மோகன் என்பவரை போலீஸ் பார்ட்டி சகிதம் கைது செய்து

அதே இடத்தில் பொது சாட்சிகளான ராஜசேகர், பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் எதிரி மோகன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.20 மணி முதல் 17.00 மணி வரை அதே இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேலும், எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய கடப்பாரையை எதிரி மோகன் என்பவர் சம்பவயிடத்தில் கார் பார்க்கிங் அருகில் மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் அதசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கடப்பாரை நான் மேற்சொன்ன முறையில் கைப்பற்றியதாகும். அந்த கடப்பாரை சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைது செய்த எதிரி மோகனை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும், பார்வை மகசர், மாதிரி வரைபட சாட்சிகள் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் கட்ட விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பை வைத்தேன். சாட்சிகள் ராஜா, பசுபதி ஆகியோர் என்னிடம் சொன்ன விவரங்களைத்தான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.